DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No. 29 / 2024**
**P.W. 10**

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர் திரு. எம்.வெங்கடேஷ் |
| Father's Name | : | திரு. மணிமாறன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 35 |

(Accused 1 and 2 are present. A3 and A4 are absent. Petition filed and allowed.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 1st day of June 2026.

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் மணப்பாறை, அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 30.11.2022 அன்று இதே மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, மதியம் 3.50 மணியளவில் மணப்பாறை, சாமியார் தோப்பு, பொத்தப்பட்டி கிராமத்தை சேர்ந்த சுப்ரமணி என்பவரது மனைவி செல்வி, வயது 48, என்பவர் தன்னை தெரிந்த மூன்று ஆண் நபர்களும், ஒரு பெண்ணும் கட்டை மற்றும் கல்லால் அன்று மதியம் 3.00 மணிக்கு அவரின் வீட்டின் அருகே வைத்து தாக்கியதாக கூறினார். அவர் தனக்கு உடல் முழுவதும் வலி இருப்பதாக தெரிவித்தார்.

நான் அவரை பரிசோதித்து பார்த்தபோது, அவருக்கு வெளிப்புற காயங்கள் எதுவும் காணப்படவில்லை. அவரை புற நோயாளியாக சிகிச்சை அளித்து அனுப்பி வைத்தேன். செல்வி என்பவருக்கு பதிவு செய்த விபத்து பதிவேடு உடன் கூடிய காயச் சான்றிதழ் **அ.த.சா.ஆ.4** ஆகும். அவருக்கு ஏற்பட்ட சாதாரண காயமாகும்.

அதே நாளில் 30.11.2022 அன்று இதே மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, மதியம் 3.55 மணியளவில் மணப்பாறை, சாமியார் தோப்பு,

Apeejay

பொத்தப்பட்டி கிராமத்தை சேர்ந்த சுப்ரமணி என்பவரது மகன் பாஸ்கர் வயது 23 என்பவர் தன்னை தெரிந்த மூன்று ஆண் நபர்களும், ஒரு பெண்ணும் மிளகாய் பொடி, கட்டை மற்றும் கல்லால் அன்று மதியம் 3.00 மணிக்கு அவரின் வீட்டின் அருகே வைத்து தாக்கியதாக கூறினார். அவர் தனக்கு இடது மணிக்கட்டில் வலி இருப்பதாக தெரிவித்தார்.

அவரை பரிசோதித்து பார்த்தபோது அவரது வலது கன்னத்தில் 0.5 x 0.5 செ.மீ அளவில் ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவரது இடது மணிக்கட்டில் 0.5 x 0.5 செ.மீ அளவில் ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவரை புற நோயாளியாக சிகிச்சை அளித்து அனுப்பி வைத்தேன். பாஸ்கர் என்பவருக்கு பதிவு செய்த விபத்து பதிவேடு உடன் கூடிய காயச் சான்றிதழ் **அ.த.சா.ஆ.5** ஆகும். அவருக்கு ஏற்பட்ட சாதாரண காயமாகும். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>**

செல்வி என்பவர் தனக்கு உடல் வலி இருப்பதாக உண்மைக்கு மாறாகவும் சொல்லியிருக்க கூடும். உடல் அசதி காரணமாகவும் வலி இருப்பதாக சொல்லலாம். பாஸ்கர் என்பவருக்கு ஏற்பட்ட இரண்டு சிராய்ப்பு காயங்களும் ஏதாவது வேலை செய்யும்போது ஏற்பட வாய்ப்புண்டு.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Approved